**FIRST INFORMATION REPORT** u/s 173 BNSS

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8213034

1. District மாவட்டம் : கிருஷ்ணகிரி PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 8/AC/2024 Date: நாள் 24.10.2024

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7(a) &
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு திருத்தச் சட்டம் 2018 Sections பிரிவுகள்: 7(a) r/w 12
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 23.10.2024
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 13.30 மணிக்கு முன்பு
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2024 Time : நேரம் 10.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் 11.30 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்மொழியாக தன்னிச்சையாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 70 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், தேன்கனிக்கோட்டை.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. பிரபு (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. சண்முகம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 21.04.1983 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. G. சீனிவாசன், சார்பதிவாளர் (பொ), தேன்கனிக்கோட்டை.
   2) திரு. M. கருணாகரன் s/o மோகன், 74, குதிரைபாளையம், ஓசூர்.
   3) திருமதி. G. சுஜாதா D/o குண்டப்பா, 117/118 நேதாஜி ரோடு, தேன்கனிக்கோட்டை

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள்களில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/10/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

24/10/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.10.2024 at 12.15hrs

Name: பெயர் S. பிரபு
Rank: நிலை ………………….No. எண் ……….
காவல் ஆய்வாளர்,
உண.த.க. பிரிவு,
கிருஷ்ணகிரி.

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/AC/2024 U/s 7 (a) and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வ.எண்.12-ன் தொடர்ச்சி...**

23.10.2024 ஆம் தேதி மாலை 13.30 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார் பதிவாளராக பணிபுரிந்துவரும் திரு.G.சீனிவாசன் அவர்கள் பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மூலமும், இடைத்தரகர்கள் மூலமும் பத்திரங்கள் பதிவு செய்து கொடுத்ததற்காக பெருமளவு பணம் கையூட்டாக பெற்றுக் கொண்டிருப்பதாக கிடைத்த நம்பகமான இரகசிய தகவலின் அடிப்படையில் அரசு சாட்சிகள் (1) திரு.B.பிரகாஷ், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். (2) திரு.P.ராஜப்பா, பதிவறை எழுத்தர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி மாவட்ட ஆயுதப்படை பெண் காவலர் 107 P.நதியா மற்றும் காவலர் குழுவினருடனும் புறப்பட்டு 23.10.2024-ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு தேன்கனிகோட்டை சார்பதிவாளர் அலுவலக சாலையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினருடன் சென்றடைந்தோம். அந்த அலுவலகத்தின் தெற்கு நோக்கி இருந்த நுழைவாயிலின் வழியாக உள்ளே நுழைந்தபோது அந்த அலுவலகத்தின் மத்திய அறையின் மேற்கு சுவரை ஒட்டி கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த சார் பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த பொறுப்பு சார் பதிவாளர் திரு.G.சீனிவாசன் என்பவரிடம் நான் என்னுடன் வந்த குழுவினரையும் அடையாளம் சொல்லி அறிமுகம் செய்து கொண்டு திடீர் சோதனைக்காக வந்த விவரத்தை தெரிவித்தேன். மேலும், அங்கு பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்களிடம் திடீர் தணிக்கை குறித்த விவரத்தினை கூறி அதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொண்டேன். பின்னர் அங்கு பணியிலிருந்த இதர பணியாளர்களை அவரவர் இருக்கையிலேயே அமர்ந்து பணிகளை கவனிக்குமாறு அறிவுறுத்தினேன். பின்பு, அலுவலகத்தில் இருந்த தனி நபர்களான (1) திரு.V.விஜய், (2) திரு.M.புனித்குமார், (3) திரு.K.V.புனித்குமார், (4) திரு.G.ராகுல், (5) திரு.R.ரவிந்திரன், (6) திரு.N.சுனில், (7) திரு.R.வெங்கடாசலபதி,

(8) திரு.B.M.சீனிவாசன், (9) திரு.R.வெங்கடசாமி, (10) திரு.N.லவின்குமார், (11) திரு.R.சங்கர், (12) திருமதி.K.முருகம்மாள், (13) திருமதி.V.ரஞ்சிதா, (14) திருமதி.V.அர்ச்சனா, (15) திரு.G.மாரியப்பன் மற்றும் (16) திரு.M.கருணாகரன் ஆகியோரை ஒவ்வொருவராக அழைத்து விசாரணை செய்யப்பட்டது. அதில் வரிசை எண் 1 முதல் 9 வரையில் உள்ள தனிநபர்களிடம் அவர்கள் கைவசம் வைத்திருந்த பணம் குறித்து விசாரிக்க, மேற்கண்ட நபர்கள் அவரவர் தம்மிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தும், அவர்கள் பத்திர பதிவிற்கு வெளியூர்களில் இருந்து வந்திருந்ததால் உணவு மற்றும் பயண செலவிற்காக பணம் கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தனர். மேற்படி நபர்களின் விளக்கம் ஏற்கதக்க வகையில் இருந்ததாலும் அவர்கள் பத்திர பதிவிற்கு வந்த பொதுமக்கள் என்பதாலும் வரிசை எண் 1 முதல் 9 வரை உள்ள நபர்களின் சொந்த பணத்தினை அரசு சாட்சிகளின் முன்னிலையில் சம்மந்தப்பட்ட நபர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. வரிசை எண் 10 முதல் 15 வரை உள்ள நபர்கள் பத்திர எழுத்தர் அலுவலகங்களில் பணிபுரிவதாக தெரிவித்தனர். இருப்பினும் அவர்களில் திரு.N.லவின்குமார் (ரூ.200/-) மற்றும் திரு.R.சங்கர் (ரூ.1,200/-) ஆகியோரிடம் மட்டும் பணம் இருந்ததாலும் அந்த பணம் அவர்களது சொந்த பணம் என்று கூறி அவர்கள் சரியான விளக்கம் கொடுத்ததாலும் அந்த பணத்தினை அரசு சாட்சிகளின் முன்னிலையில் சம்மந்தப்பட்ட நபர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வரிசை எண் 16-ல் உள்ள மத்திகிரியை சேர்ந்த திரு.கருணாகரன் என்பவரிடம் அவர் வைத்திருந்த பணம் ரூ.1,00,000/- (ரூ.500x200= 1,00,000/-) ஐ பற்றி கேட்க, அதற்கு அவர் பத்திர பதிவு முடிந்த பின்பு தனக்கும் தனது தங்கைக்கும் நிலத்தை விற்பனை செய்யும் திரு.ஜெகன் என்பவருக்கு கொடுப்பதற்காக வைத்திருப்பதாக கூறினார். எனவே அவர் கையில் பதிவுக்காக வைத்திருந்த முத்திரைதாள் வரிசை எண்கள் BE 163887 முதல் BE 163889 வரை உள்ளடக்கிய 13 தாள்கள் கொண்ட அசல் ஆவணத்தை பெற்று ஆய்வு செய்தபோது அதன் நான்காவது பக்கத்தில் மேற்படி நிலத்திற்கான கிரைய தொகை ரூ.6,06,000/- முழுவதும் ரொக்கமாக சாட்சிகளின் முன்னிலையில் நிலத்தின் உரிமையாளர் திரு.ஜெகன் அவர்கள் ஏற்கனவே பெற்றுக்கொண்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், அந்த ஆவணத்துடன் ஆவண பதிவிற்காக முன்பதிவு செய்ததற்கான ஒப்புகை சீட்டு தற்காலிக எண் TP/198417099/2024, பதிவு செய்த நாள் 22.10.2024 முன்பதிவு நாள் மற்றும் நேரம் 23.10.2024, 11 மணி முதல் 12 மணி வரை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே

திரு.கருணாகரன் கூறிய விளக்கம் ஏற்கதக்க வகையில் இல்லாததாலும், அந்த பணம் பத்திரபதிவு செய்துகொடுப்பதற்காக சார் பதிவாளருக்கு கையூட்டாக கொடுப்பதற்காக கொண்டுவரப்பட்ட பணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்க சரியான முகாந்திரம் இருந்ததாலும் அந்த பணம் ரூ.1,00,000/-ஐ அரசு சாட்சிகளின் முன்னிலையில் அப்போது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த பொறுப்பு சார் பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவர் தனது சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.320/- எடுத்து ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அந்த பணம் அவர் அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அது சரியாக இருந்தது. எனவே அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சார் பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் அலுவலக பணியாளர்களை ஆஜர் செய்யுமாறு கேட்டுக்கொண்டதன்பேரில் அங்கு ஆஜரான (1) திரு.E.சீனிவாசன், (2) திருமதி.M.சுவாதி, (3) திரு.V.B.தியாகராஜன், (4) திரு. B.அக்மல் மற்றும் (5) திரு.T.பழனியப்பன் ஆகியோரை அழைத்து விசாரணை செய்யப்பட்டது. அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அதற்கு அவரவர்கள் அவர்களிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்து அவரவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தனர். அந்த பணம் அலுவலகத்தில் பராமரித்துவரும் தனிநபர் பணப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அது சரியாக இருந்தது. எனவே அந்த பணம் அவர்களிடமே அரசு சாட்சிகள் முன்னிலையில் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு சார் பதிவாளர் அலுவலக மத்திய அறையின் வடக்குபுற சுவற்றில் தெற்கு முகம் பார்த்தவாறு இருந்த நுழைவாயிலின் வழியாக பதிவு வைப்பறையினுள் நுழைந்து பொறுப்பு சார் பதிவாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில் காவலர் குழுவினருடன் அந்த அறையில் சோதனை செய்ய அந்த அறையில் 3 இரும்பு பீரோக்கள் மற்றும் 9 மர பீரோக்கள் 8 சிமெண்ட் அலமாரிகள், 4 மர அலமாரிகள் ஆகியவை காணப்பட்டன. அவற்றை ஒவ்வொன்றாக சோதனை செய்தபோது அதில் பழைய ஆவணங்கள் மற்றும் கோப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு அந்த பதிவு வைப்பு அறையின் கிழக்கு சுவற்றில் மேற்கு பார்த்தவாறு இருந்த மர அலமாரியினை சோதனை செய்கையில் அது மேலிருந்து கீழாக நான்கு தட்டுகளாகவும், ஒவ்வொரு தட்டும் தலா 4 அறைகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. அந்த அலமாரியை பொறுப்பு

சார் பதிவாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில் சோதனை செய்தபோது, அந்த அலமாரியின் மேல் தட்டில் வலதுபக்கமிருந்து இரண்டாவது அறையினை சோதனை செய்தபோது, அந்த அறையில் இருந்த கோப்புகளுக்கு அடியில் கற்றையாக பணம் ஒரு வெள்ளை தாளில் சுற்றிவைக்கப்பட்டிருந்தது. அந்த பணத்தை அரசு சாட்சிகளின் முன்னிலையில் எடுத்து எண்ணிப்பார்க்கையில் அதில் 500 ரூபாய் தாள்கள் 88 எண்ணிக்கையிலும், 200 ரூபாய் தாள்கள் 12 எண்ணிக்கையிலும் மற்றும் 100 ரூபாய் தாள் ஒன்றும் என மொத்தம் ரூ.46,500/- இருந்தது. அந்த பணத்தை பற்றி பொறுப்பு சார் பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் விளக்கம் கேட்க, அதற்கு அவர் அந்த பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். மேலும் மேற்கண்ட தொகைக்கு அங்கிருந்த எவரும் உரிமை கோரவில்லை. எனவே பொதுமக்களுக்கு தடைசெய்யப்பட்ட பகுதியான ஆவண பதிவறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இப்பணம் தேன்கனிகோட்டை சார் பதிவாளரால் கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக மேற்படி பணம் இந்நடவடிக்கையின்போது சாட்சிகள் முன்னிலையில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி பதிவு வைப்பறை முழுவதும் அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில் பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் மேற்படி மத்திய அறையில் ஆவண பதிவிற்காக வந்திருந்த அஞ்செட்டி வட்டம், பேளாளம் கிராமத்தை சேர்ந்த மல்லெகௌடா மகன் திரு.புனித்குமார் என்பவர் அங்கு நின்றிருந்த ஆவண எழுத்தர் அலுவலக பணியாளரான திரு.லவின்குமார் என்பவரிடம் பத்திர பதிவிற்காக 1% தொகையை வாங்கிக்கொண்டு பத்திரப்பதிவை தாமதப்படுத்திக்கொண்டுள்ளீர்கள் என்றும், தாங்கள் பத்திரப்பதிவை முடித்துவிட்டு தங்களது கிராமத்திற்கு செல்ல தாமதமாவதாகவும் சொல்லிக்கொண்டிருந்தார். அப்போது நான் திரு.புனித்குமாரிடம் பத்திரம் தயார் செய்துகொடுக்க எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என விசாரிக்க, அதற்கு அவர் பத்திர மதிப்பில் 1 சதவீதம் தொகையினை மொத்தமாக பத்திரம் தயார் செய்யும் எழுத்தருக்கு கொடுத்ததாகவும், தங்கள் குடும்பத்தினரால் அன்று மூன்று ஆவணங்கள் பதிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீ வினாயகா என்டர்பிரைசஸ் என்ற கடை நடத்திவரும் திருமதி.சுஜாதா என்ற ஆவண எழுத்தர் மேற்படி மூன்று ஆவணங்களை தயார் செய்து கொடுத்து பத்திர பதிவிற்கு உதவியாக அவரது அலுவலக பணியாளர் திரு.லவின்குமாரை உடன் அனுப்பி வைத்துள்ளதாகவும் சொன்னார். மேலும்

அவரிடம் ஆவண பதிவிற்காக சார் பதிவாளர் அலுவலகத்தில் பணமாக ஏதும் கொடுத்தீர்களா என்று கேட்க, அவர் அதற்கும் சேர்த்துதான் மொத்தமாக ஆவண மதிப்பில் 1 சதவீதம் தொகையினை ஆவண எழுத்தர் அலுவலகத்தில் வாங்கிக்கொண்டார்கள் என்று கூறினார். அதுபற்றி திரு.லவின்குமாரிடம் ஆவணங்கள் தயார் செய்து கொடுப்பதற்கு வாங்கப்படும் கட்டணம் குறித்து விசாரிக்க, அவர் ஒரு ஆவணத்திற்கு சுமார் ரூ.400/- அல்லது ரூ.500/- கட்டணமாக வாங்குவோம் என்று சொன்னார். அவர்கள் இருவரும் கூறிய தகவல்கள் முரண்பட்டதாக இருந்ததால் அது குறித்து விசாரித்து அறியும் பொருட்டு திரு.லவின்குமார், அரசு சாட்சிகள் மற்றும் பெண்காவலர் 107 P.நதியா ஆகியோருடன் தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலக நுழைவு வாயிலின் நேரெதிரில் சுமார் 20 அடி தொலைவில் வடக்கு பார்த்தவாறு அமைந்திருந்த ஸ்ரீ வினாயகா என்டர்பிரைசஸ் என்ற கடையினுள் நுழைந்தபோது அங்கிருந்த கணினி இருக்கையில் அமர்ந்திருந்த கிருஷ்ணகிரி மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.636/ஆ1/2021-9, நாள் 25.02.2021-ன்படி உரிமம் பெற்று முத்திரைத்தாள் விற்பனை செய்துவரும் திருமதி.R.ரம்யா மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டப்பதிவாளர் அவர்களால் வழங்கப்பட்ட உரிமம் எண் B/1/KSG/2016, நாள் 24.02.2016-ன்படி உரிமம் பெற்று ஆவண எழுத்தராக இருந்து வரும் திருமதி.G.சுஜாதா ஆகியோரிடம் என்னையும், என்னுடன் இருந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு பத்திரப்பதிவு எழுத்தர் திருமதி.சுஜாதா அவர்களிடம் பத்திர பதிவிற்காக ஆவணம் தயார் செய்து கொடுப்பதற்கு வாங்கப்படும் கட்டணம் குறித்து விளக்கம் கேட்டதற்கு, அவரும் திரு.லவின்குமார் கூறியது போலவே ஒரு ஆவணத்திற்கு சுமார் ரூ.400/- அல்லது ரூ.500/- கட்டணமாக வாங்குவோம் என்று சொன்னார். அதற்கான இரசீதுகள் மற்றும் பதிவேடுகள் ஏதேனும் பராமரித்து வருகிறீர்களா என்று கேட்டபோது அவர் ஆம் என்று கூறி பக்கம் 1 முதல் 344 வரை கொண்ட பதிவேட்டில் 2019 மே மாதம் முதல் 2023 ஜுன் மாதம் வரை 1 முதல் 271 பக்கங்கள் வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பதிவேட்டினையும், அதேபோல் பக்கம் 1 முதல் 258 வரை கொண்ட பதிவேட்டில் 2023 ஜுலை மாதம் முதல் 2024 அக்டோபர் மாதம் வரை 1 முதல் 159 பக்கங்கள் வரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பதிவேட்டினையும் எடுத்து ஆஜர் செய்தார். அவற்றை ஆய்வு செய்தபோது ஆவணங்கள் தயாரித்துக் கொடுக்க எழுத்து கூலியாக தேதிவாரியாக பெறப்பட்ட தொகை, ஆவண எண் மற்றும் ஆவண

வகை, ஆவணதாரர் பெயர் மற்றும் கையொப்பம் உள்ளடங்கிய பதிவுகள் இருந்தது. அதில் எழுத்து கூலி என ரூபாய் 50/- அல்லது ரூ.100/- மட்டுமே பெறப்பட்டதாக பதிவுகள் இருந்தது. எனவே அவரிடம் எழுத்து கூலி பெற்றதற்காக கொடுக்கப்பட்ட இரசீது குறித்து கேட்டபோது திருமதி.சுஜாதா தனது வசம் இருந்து இரண்டு இரசீது புத்தகங்களை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒன்று வரிசை எண் 101 முதல் 200 வரை கொண்டதாக இருந்தது. அவற்றில் ஆவணம் தயாரித்ததற்கு கட்டணமாக ரூ.50/- அல்லது ரூ.100/- பெறப்பட்டதாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அந்த இரசீதுகளில் பெரும்பாலானவற்றில் ஆவணதாரர்களுக்கு வழங்கவேண்டிய அசல் இரசீதுகள் வழங்கப்படாமலும் சிலவற்றில் ஆவணதாரர்களின் கையொப்பம் பெறப்படாமலும், ஆவண எழுத்தரின் கையொப்பம் இடப்படாமலும் இருந்தன. மேலும் அவர் ஆஜர்படுத்திய மற்றொரு இரசீது புத்தகம் வரிசை எண் 601 முதல் 800 வரை கொண்டதாக இருந்தது. அதில் வரிசை எண் 600 முதல் 777 வரை எழுதப்பட்டிருந்தது. அவற்றில் ஆவணம் தயாரித்ததற்கு கட்டணமாக ரூ.100/- பெறப்பட்டதாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் திருமதி.சுஜாதாவிடம் 23.10.2024 ஆம் தேதி தயார் செய்து கொடுத்த ஆவணங்கள் மற்றும் அதற்காக பெறப்பட்ட ஆவண எழுத்துக் கூலி குறித்து விசாரிக்க, தான் இன்றைய எழுத்துக் கூலி இன்னும் வாங்கவில்லை என்று கூறினார். ஆனால் ஆவணதாரர் புனித்குமார் தெரிவித்த தகவலும் ஆவண எழுத்தர் திருமதி.சுஜாதா மற்றும் அவரது உதவியாளர் திரு.லவின்குமார் ஆகியோர் கூறிய தகவல்களும் முரண்பட்டதாகவும், சந்தேகிக்கதக்கவகையிலும் இருந்தது. எனவே ஆவண எழுத்தர் திருமதி.சுஜாதாவிடம் அலுவலகத்தில் பதிவு செய்யப்படாத ஏதேனும் ஆவணங்களோ அல்லது பணமோ வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் பதிவு செய்யப்படாத ஆவணங்கள் ஏதும் இல்லை என்று கூறி அவரது மேசை டிராயரில் இருந்து கற்றையாக பணத்தாள்களை எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் தாள்கள் 60 எண்ணிக்கையிலும், 200 ரூபாய் தாள்கள் 03 எண்ணிக்கையிலும் 100 ரூபாய் தாள்கள் 04 எண்ணிக்கையிலும் என மொத்தம் ரூ.31,000/- இருந்தது. வேறு ஏதேனும் பணம் வைத்துள்ளீர்களா என்று திருமதி.சுஜாதாவிடம் கேட்க, அவர் ஆம் என்று சொல்லி அவரது மேசைக்கு வலதுபுறம் வடக்கு பார்த்தவாறு போடப்பட்டிருந்த மற்றொரு மேசையின் டிராயரில் இருந்து கற்றையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் தாள்கள் 43

எண்ணிக்கையிலும், 200 ரூபாய் தாள்கள் 05 எண்ணிக்கையிலும் என மொத்தம் ரூ.22,500/- இருந்தது. மேற்படி பணத் தொகைகள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அதில் பணம் ரூ.22,500/- அலுவலக கட்டிடத்தின் உரிமையாளர் திரு.அபிஷேக் என்பவர் வந்து வைத்துவிட்டு சென்றதாகவும், மீதம் உள்ள ரூ.31,000/- இன்று காலை தனது மகனுக்கு பள்ளி கட்டணம் செலுத்துவதற்காக வீட்டில் இருந்து எடுத்துவந்து வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அந்த கடையின் வாடகை குறித்து விசாரித்தபோது திருமதி.சுஜாதா, தான் ரூ.5,000/- மாத வாடகை கொடுப்பதாகவும், தனது அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.லவின்குமாருக்கு வாரம் ரூ.2,000/- சம்பளமாக கொடுப்பதாகவும் தெரிவித்தார். மேற்கண்டவாறு திருமதி.சுஜாதா அளித்த தகவல்கள், அவர் சமர்ப்பித்த வருமானத்திற்கான ஆவணங்கள் மற்றும் அவர் வசமிருந்த பணம் ஆகியவற்றை ஒப்பிட்டு பார்த்தபோது அவை அனைத்தும் முரண்பட்டதாக இருந்தது தெரியவந்தது. எனவே மேற்படி அலுவலகத்தில் இருந்த பணம் ஆவண எழுத்தர் திருமதி.சுஜாதா அவர்களால் தயார் செய்து கொடுக்கப்பட்ட ஆவணங்களை பதிவு செய்துகொடுத்ததற்காக தேன்கனிக்கோட்டை பொறுப்பு சார்பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்க நம்பதகுந்த காரணங்கள் இருப்பதால் மேற்படி பணம் ரூ.53,500/- மேல் விசாரணைக்காக இந்நடவடிக்கையின்போது அரசு சாட்சிகள் முன்னிலையில் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் ஆவண எழுத்தர் திருமதி.சுஜாதா அவர்கள் ஆஜர் செய்த இரண்டு இரசீது புத்தகங்கள் மற்றும் இரண்டு பதிவேடுகள் ஆகியவை மேல் விசாரணைக்காக இந்நடவடிக்கையின்போது அரசு சாட்சிகள் முன்னிலையில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினருடன் தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம் வந்து பொறுப்பு சார் பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் அதேபோல் ஆவண எழுத்தர் திருமதி.சுஜாதா அவர்களின் உதவியாளர் திரு.லவின்குமரின் கையில் வைத்திருந்த டோக்கன் எண் TP/198498659/2024 (Doc.No 10900/2024), TP/198500062/2024 (Doc.No 10899/2024) மற்றும் TP/198504738/2024 ஆகிய ஆவணங்கள் ஒளிநகல் எடுக்கப்பட்டு பொறுப்பு சார்பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நடவடிக்கையின்போது அரசு சாட்சிகள் முன்னிலையில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் 23.10.2024 அன்று பதிவு செய்யப்பட்ட

ஆவணங்கள் விவரம் குறித்து பொறுப்பு சார் பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் விசாரிக்க அவர் தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தின் 23.10.2024 நாளது A-கணக்கின் விவரத்தினை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து வழங்கி, அன்றைய தினம் 51 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்காக இணையவழியில் அரசுக்கு பெறப்பட்ட வருவாய் ரூபாய் 17,58,184/- எனவும் தெரிவித்தார். 23.10.2024 நாளது H-கணக்கின் விவரத்தினை கணினியிலிருந்து பதிவிறக்கம் செய்து பிரிண்ட் எடுத்து வழங்கி, அன்றைய தினம் இணையவழியில் அரசுக்கு பெறப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 26,592/- எனவும் தெரிவித்தார். மேலும் விசாரணைக்காக அலுவலக வருகைப் பதிவேடு (தொகுதி எண்.112) அக்டோபர் மாத பக்கம், தனியார் நிறுவன ஊழியர்களுக்கான வருகைப் பதிவேட்டின் அக்டோபர் மாத பக்கம், தனி நபர் பணப்பதிவேடு 23.10.2024-ஆம் நாளுக்கான பதிவுகள் கொண்ட பக்கம் ஆகியவற்றை நானும், அரசு சாட்சிகளும் பார்வையிட்டு, அதற்கு அடையாளமாக மேற்கண்ட பக்கங்களில் கையொப்பம் செய்தோம். மேற்படி ஆவணங்கள் ஒளிநகல்கள் எடுக்கப்பட்டு, பொறுப்பு சார் பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்கள் சான்றொப்பமிட்டு வழங்கினார். மேற்கண்ட ஆவண நகல்கள் இந்த செயல்முறை நடவடிக்கையின்போது மேல் விசாரணைக்காக திடீர் சோதனை நடவடிக்கைகள் மூலம் என்னால் கைப்பற்றப்பட்டது. பொறுப்பு சார் பதிவாளர் திரு.சீனிவாசன் அவர்களிடம் இந்த ஆண்டிற்கான கொடிநாள் நிதி இலக்கு ஏதேனும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்று கேட்க, அதற்கு அவர் அவ்வாறு தனக்கு இலக்கு ஏதும் நிலுவை இல்லை என்றும், இணையவழியில் மட்டுமே கொடிநாள் வசூல் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் அரசுக் கணக்கில் உள்ள இருப்புத் தொகை பற்றி அவரிடம் கேட்க, தற்போது சார் பதிவாளர் அலுவலகங்களில் எந்த தொகை செலுத்த வேண்டுமானாலும் அதை இணையவழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும் என்றும் சார்பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக அரசு கணக்கில் செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும் வசூல் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கைகள் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலக மடிக்கணினியில் 23.10.2024-ம் தேதி மாலை 16.00 முதல் இரவு 23.30 வரை தயார் செய்யப்பட்டது. அதன் நகல்கள் சார் பதிவாளர் திரு.G.சீனிவாசன், ஆவண எழுத்தர் திருமதி.G.சுஜாதா மற்றும் தனிநபர் திரு.M.கருணாகரன் ஆகியோருக்கு இலவசமாக

வழங்கப்பட்டது. பிறகு பொது ஊழியரான பொறுப்பு சார் பதிவாளர் திரு.G.சீனிவாசன் என்பவர் ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டாக பணம் பெற்றுக்கொண்டதற்கான சரியான முகாந்திரம் இருப்பதாலும் மற்றும் ஆவண எழுத்தர் திருமதி.G.சுஜாதா மற்றும் தனிநபர் திரு.M.கருணாகரன் ஆகியோர் பத்திரபதிவு செய்வதற்காக சார் பதிவாளருக்கு கையூட்டு கொடுக்கும் உள்நோக்கத்துடன் பணம் வைத்திருந்ததற்கான சரியான முகாந்திரம் இருப்பதாலும் இன்று 24.10.2024-ம் தேதி காலை 11.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.8/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 -ன்படி தேன்கனிக்கோட்டை பொறுப்பு சார் பதிவாளர் திரு.G.சீனிவாசன் என்பவர் மீதும், u/s 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC amendment Act 2018 -ன்படி ஆவண எழுத்தர் திருமதி.G.சுஜாதா மற்றும் தனிநபர் திரு.M.கருணாகரன் ஆகியோர் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

24/10/24

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி.